செய்தி வெளியீடு எண். 104 நாள். 21.02.2020

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் கிராமிய மணம் மாறாமல் நகர்ப்புற வசதிகளை கிராமங்களுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், நேமம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக, கிராமிய மணம் மாறாமல் நகர்ப்புற வசதிகளை கிராமங்களுக்கு வழங்கும் திட்டத்தில் (ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் மிஷன் திட்டம்) கட்டி முடிக்கப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களையும், ரூ. 17.91 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியையும், குத்தம்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ. 3.53 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட சமையல் கூடத்தினையும், குத்தம்பாக்கம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பாக்கு மரத்தால் செய்யக்கூடிய தட்டு உள்ளிட்ட பொருட்கள் தயாரிக்கப்படுவதையும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக காகிதத்தால் தயாரிக்கக்கூடிய பொருட்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் கிராமிய மணம் மாறாமல் நகர்ப்புற வசதிகளை கிராமங்களுக்கு வழங்கும் திட்டத்தில் (ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் மிஷன் திட்டம்) தேசிய ரூர்பன் திட்ட செயல்பாடு தொடர்பாக நேமம் கிராமத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ. 426.07 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் பயண்பாட்டில் இருப்பதையும் மின்னாக்கி (ஜெனரோட்டர்), அவசர சிகிச்சைக்கான உபகரணங்கள், மகப்பேருக்கான அவசர மருந்துகள், நோய்தடுப்புக்கான மருந்துகள் வங்கப்பட்டு நேமம் ஊராட்சி மற்றும் அதைச் சுற்றி உள்ள 11 ஊராட்சிகளின் மக்கள் பயன்பட்டு வருகின்றனர். குத்தம்பாக்கம் ஊராட்சியில் ரூர்பன் திட்டத்தின் கீழ் 60,000 லிட்டர் மேல்நிலை நிர்தேக்க தொட்டி ரூ.17.91 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் இணைப்புடன் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. குத்தம்பாக்கம் அரசு மேல்நிலை பள்ளி வளாகத்தில் ரூர்பன் திட்டத்தின் கீழ் ரூ.3.52 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள சமையலறை கட்டடத்தில் தற்போது 75 மாணவர்களுக்கு உணவு தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.

குத்தம்பாக்கம் ஊராட்சியில் சூரிய சக்தியினை பயன்படுத்தி ஊராட்சி அலுவலகத்தில் விளக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது ஒரு ஊராட்சிக்கு ரூ.9.09 இலட்சம் மதிப்பீட்டில் 11 ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதனால் 3 KV அளவில் உற்பத்தி செய்து மின்சாரம் சேமிக்கப்படுவதுடன் மின் கட்டணம் பெருமளவு குறையும்.

மேலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், நேமம் ஊராட்சியில் பாக்கு மட்டை தட்டுகள் உற்பத்தி செய்யும் மையத்தை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் 21.02.2020 அன்று பார்வையிட்டார். இம்மையம் நேமம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் 8 சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கான மூலப்பொருட்கள் Eco–Green நிறுவனம் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இம்மையத்திலிருந்து தினசரி 500 பாக்குமரத் தட்டுக்கள் கோக்கோக் கோல நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. உள்ளூர் கடைகள் மற்றும் விழா நிழச்சிகளுக்கும் பாக்கு மட்டை தட்டுகள். இந்த மையத்திலிருந்து விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. குத்தம்பாக்கம் ஊராட்சியில் காகித பொருட்கள் உற்பத்தி செய்யும் மையம் 2013-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் நாகவல்லி மகளிர் சுய உதவிக்குழுவை சேர்ந்த 15 நபர்கள் இத்தொழிலில் ஈடுபட்டு வருகிறனர். இந்தியன் வங்கி, திருமழிசை கிளையில் ரூ. 5.00 இலட்சம் கடன்பெற்று இத்தொழிலை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இம்மையத்தில் 35 விதமான காகிதப்பொருட்கள் உற்பத்தி செய்து சந்தைப் படுத்தப்படுகின்றனர். இப்பொருட்கள் கல்லூரி சந்தைகளிலும் மகளிர் சுய உதவிக்குழு உற்பத்தி பொருட்களின் விற்பனை கண்காட்சிலும் நல்ல சந்தை வாய்ப்பினை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், குத்தம்பாக்கம் தொகுப்பில் அடங்கிய 11 ஊராட்சிகளில் ரூ.2866.00 இலட்சம் மதிப்பீட்டில் 210 பணிகள் முடிந்து விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

இச்செய்தியாளர் சந்திப்பில் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி.க.லோகநாயகி, திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திரு.வை.ஜெயக்குமார், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் திரு.டி.தேசிங்க், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு.ஜெயக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் (பூவிருந்தவல்லி) திரு.வாசுதேவன், பூவிருந்தவல்லி வட்டாட்சியர் திருமதி.காந்திமதி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**